வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Public Relations Office

Press Release no:7 dated: 21.12.2024

**VOC Port to augment capacity to serve the trade**

V O Chidambaranar Port, the vibrant seaport in Southern part of India has handled a cargo volumes of 29.70 Million Tonnes including 5.62 Lakh TEUs of containers during this financial year 2024-25 upto 19th December 2024, marking an overall growth of 1.87% and 6.74% respectively. With the ever-increasing trend in cargo handling, the Port's has initiated several strategic capacity augmentation and cargo evacuation initiatives to increase cargo throughput, enhance handling efficiency and expand its market share in the region.

To give a fillip to the container trade, the Port's 3rd Container Terminal 'Tuticorin International Container Terminal', operated by JM Baxi Group, with a draft of 14.20 metres and LOA of 370 metres, has been recently inaugurated by Shri Sarbananda Sonowal, Hon'ble Union Minister for Ports, Shipping and Waterways, on 16th September,2024. The terminal has commenced its operations and shall handle 6 Lakh TUEs per Annum.

To augment the capacity of the bulk cargo handling at the Port, the North cargo berth-III (NCB-3) with Length overall (LOA) of 306 metres will be dredged by the Port by February 2025, to handle vessels upto 14.20 metres draft. The dredging will also be done parallelly in the entrance channel, approach channel and turning circle area of the Port. The interim operations of the terminal on completion of dredging shall commence using 2 Harbour Mobile Cranes with capacity of 100 – 120 Tonnes, by January 2025 end. The NCB-3 will be mechanized by M/s. JSW Infrastructure Ltd., by December, 2026 with shore unloaders, capable of discharging 7 Million Tonnes per annum.

In order to accommodate ships of Beam of 49 metres and LOA of 366 (Existing Beam 48 metres , LOA 310 metres), widening of the Port's entrance channel from 152.40 Metres to 230 Metres has also been taken up by the Port.

To accommodate additional bulk and break-bulk cargo ships, the Port has initiated proposal for construction of Berth No.10 with LOA of 440 metres, under EPC mode at an approximate cost of Rs. 80 Crores. The berth already has a draft of 10.70 metres and would be dredged to 14.50 metres in near future.

Additionally, at utilise the idle capacity of Coal Jetty-1, operated by Tamil Nadu Generation and Distribution Corporation Limited (TANGEDCO) , installation of link conveyor is in progress, for lighterage of coal vessels with arrival draft of 13 metres.

To increase the throughput of North Caro Berth-2, an additional Harbour Mobile Crane with a capacity of 100 Tonnes to enhance the capacity to handle 25,000 tonnes a day shall be commissioned by 2nd week of January 2025. Additional berth area of around 5000 Sq. metres each in NCB-2 and NCB-3 shall be made available by backfilling with dredged materials and it will be completed by this year end.

To handle smaller vessels of around 120 meters of LOA and parallel body length 52 metres to 55 metres in the Port's oil jetty, 2 mooring dolphins with necessary infrastructure will be constructed by the mid of the year 2025.

To handle windmill blades and accessories for the proposed Offshore wind energy hub in the coastline of Tamil Nadu, the Port has proposed to construct an exclusive terminal for handling Windmill blades and accessories with Length overall of 470 m and backup area of 30 Hectares.

As a part of a mission to position VOC Port as the Green Hydrogen / Ammonia hub of India, the Port has allocated 501 acres of land to 4 firms for Green Hydrogen / Ammonia manufacturing & storage facilities at a total investment worth ₹41,860 crores. A pilot demonstration project for establishing a Green Hydrogen production, storage, and power generation using fuel cells is currently in progress and is expected to be completed by January 2025. In parallel, the Port is set to execute Green Hydrogen Pilot Bunkering Project, which will demonstrate bunkering and refuelling facilities for green hydrogen and its derivatives. Port is also in the process of establishing necessary berthing and cargo handling infrastructure to handle Green Hydrogen / Ammonia to a tune of around 2 Million Tonnes / Annum.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, VOC Port Authority, in his message stated that ‘with the advantages of being the all-weather port, strategic location close to East West International sea route, lowest operating ratio of 28.18 %, lowest turn around time of container ships, well established logistics support systems, seamless road and rail connectivity, upcoming industries, and capacity augmentation initiatives, VOC Port has immense potential to become the gateway Port of South India.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
PORT-LED PROSPERITY

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Global Connect
Fax : 91-461-2352232
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி : 7 நாள்:21.12.2024

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான வளர்ச்சி திட்டப்பணிகள்**

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் 2024-25 நிதியாண்டில், டிசம்பர் மாதம் 19-ம் நாள் வரை வ.உ.சிதம்பரனார் துறைமுகம் 29.70 மில்லியன் டன்களை கையாண்டு 1.87 சதவிகித வளர்ச்சியும், சரக்குபொட்டகங்களை பொருத்தவரையில் 5.62 இலட்சம் டிஇயுக்களையும் கையாண்டு 6.74 சதவிகித வளர்ச்சியும் அடைந்துள்ளது. வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் சரக்கு கையாளும் திறனை அதிகரித்தல் மற்றும் துறைமுகத்திற்கு கப்பல் வந்து செல்லும் நேரத்தை குறைத்தல் போன்ற முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுப்பட்டு வருகிறது.

சரக்குபெட்டக வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு வசதியாக வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 3வது சரக்குபெட்டக முனையமான ஜே.எம். பக்ஸி போர்ட்ஸ் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் லிமிடேட் நிறுவனத்திற்கு சொந்தமான தூத்துக்குடி இன்டர்நேஷனல் கன்டெய்னர் டெர்மினல் பிரைவேட் லிமிடேட் நிறுவனம் (Tuticorin International Container Terminal Private Limited) 14.20 மீட்டர் நீளமும் மற்றும் 370 அகலம் கொண்ட இம்முனையத்தை மாண்புமிகு மத்திய கப்பல், துறைமுகங்கள் மற்றும் நீர்போக்குவரத்து அமைச்சர் திரு. சர்பானந்த சோனாவால் அவர்களால் 16 செப்டம்பர் 2024 துவக்கி வைக்கப்பட்டது. இம்முனையத்தில் வருடத்திற்கு 6 இலட்சம் டிஇயு சரக்குப்பெட்டகங்களை கையாள முடியும்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் பொது சரக்குகளை கையாளுவதற்கு வசதியாக 306 மீட்டர் நீளமும், 14.20 மீட்டர் மிதவை ஆழமும் கொண்ட பெரிய கப்பல்களை கையாளுவதற்கு வசதியாக வடக்கு சரக்கு தளம் 3-ஐ (NCB-3) ஆழப்படுத்தும் பணி பிப்ரவரி 2025 மாதம் முடிவடையும், அதேசமயம் துறைமுகத்திற்கு கப்பல் வந்து செல்லும் நுழைவு வாயிலை ஆழப்படுத்தும் பணி மற்றும் கப்பல் திரும்பும் சுற்றுபாதையினை (turning circle area of the Port) ஆழப்படுத்தும் பணியும் நடைபெற உள்ளது, இம்முனையத்தில் ஆழப்படுத்தும் பணி நிறைவடையும் தருவாயில் 100-120 டன் திறன் கொண்டு நகரும் பளுதூக்கி இயந்திரங்கள் (Harbour Mobile Cranes) வரும் ஜனவரி 2025 முடிவிற்குள் நிறவப்பட்டு இடைகால செயல்பாடுகள் துவக்கப்படும். வருடத்திற்கு 7 மில்லியன் டன் சரக்குகளை வெளியேற்றத்திற்கு வசதியாக M/S.JSW தூத்துக்குடி பல்நோக்கு முனையம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் வடக்கு சரக்கு தளம் -3 ஐ இயந்திரமயமாக்கும் திட்டமானது டிசம்பர் 2026 வருடத்திற்குள் முடிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

வ.உ.சிதம்பரனார் துறைமுக கப்பல் வரும் நுழைவு வாயிலை 152.40 மீட்டரிலிருந்து 230 மீட்டராக அகலப்படுத்தும் பணியானது ரூபாய் 15.24 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 49 மீட்டர் அகலமும் மற்றும் 366 மீட்டர் நீளமும் கொண்ட பெரிய கப்பல்களை கையாள முடியும்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் கூடுதலாக பொது சரக்குகளை கையாளுவதற்கு வசதியாக பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் அடிப்படையில் தோராயமாக

ரூபாய் 80 கோடியில் சரக்குதளம் 10 அமைக்கும் பணி மேற்கொள்ள பட உள்ளது. ஏற்கனவே 10.70 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட இத்தளத்தினை வருங்காலத்தில் 14.50 மீட்டராக ஆழப்படுத்துவதற்கான திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் (TANGEDCO) நிலக்கரி தளம்-1 செயல்படாத நேரத்தில் தளத்தினை பயன்படுத்தும் நோக்கத்தில், நிலக்கரி தளம்-1-லிருந்து இணைப்பு கன்வேயர் நிலக்கரி சேமிப்புகிடங்கு வரை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதன் மூலம் 13 மீட்டர் மிதவை ஆழம் கொண்ட கப்பல்களைக் கையாள முடியும்.

துறைமுகத்தின் வடக்கு சரக்கு தளம்-2-ன் செயல்திறனை அதிகரிப்பதற்காக, அத்தளத்தில் ஒரு நாளுக்கு, கூடுதலாக 25,000 டன் சரக்குகளைக் கையாளும் நோக்கத்துடன், 100 டன் திறன் கொண்ட நகரும் பளுதூக்கி இயந்திரம் ஜனவரி 2025 இரண்டாம் வாரத்தில் நிறுவப்பட உள்ளது. வடக்கு சரக்கு தளம்-2 மற்றும் வடக்கு சரக்கு தளம்-3 ஒவ்வொன்றிலும் தலா 5000 சதுர மீட்டர் நிலப்பரப்பு கூடுதலாக உருவாக்கப்படும். இப்பணியானது இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும்.

துறைமுகத்தின் எண்ணெய் தளத்தில் சுமார் 120 மீட்டர் நீளம் கொண்ட சிறிய கப்பல்களைக் கையாளுவதற்கு வசதியாக 2 mooring dolphin-கள் தேவையான உள்கட்டமைப்புகளுடன் 2025-ஆம் ஆண்டின் மத்தியில் கட்டி முடிக்கப்படும்.

தமிழ்நாட்டின் கடலோர பகுதியில் கடலோர காற்றாலைகள் அமையவிருக்கும் திட்டத்திற்கு உறுதுணையாக காற்றாலை இறகுகள் மற்றும் உபகரணங்களை கையாளுவதற்கான ஒரு பிரத்தியேகமான முனையத்தை நிறுவ துறைமுகம் திட்டமிட்டுள்ளது. இந்த முனையமானது, 470 மீட்டர் நீளம் கொண்டதாகவும், 30 ஹெக்டேர்கள் சேமிப்பு பகுதியை உடையதாகவும் இருக்கும்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் இந்தியாவின் அமோனியா தயாரிக்கும் மையமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் அமைவதற்காக வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 501 ஏக்கர் நிலப்பரப்பினை 4 நிறுவனங்களுக்கு ஒதுக்கி ரூபாய் 41,860 கோடி மதிப்பில் பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியா உற்பத்தி மற்றும் சேமிக்கும் வசதிகள் அமைப்பதற்காக வழங்கப்பட்டுள்ளது. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, சேமிப்பு மற்றும் மின்சார உற்பத்தி நிறுவுதற்கான ஒரு முன்னோடி செயல்திட்டமானது தற்போது நடைபெற்று வருகிறது. இத்திட்டமானது வரும் ஜனவரி 2025 முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இதற்கு இணையாக துறைமுகம் பசுமை ஹைட்ரஜன் மற்றும் பங்கரிங் திட்டத்தினை செயல்படுத்த உள்ளது. பசுமை ஹைட்ரஜன் பங்கரிங் செயலாக்க திட்டம் விரைவில் முடிக்கிவிடப்பட உள்ளது. பசுமை ஹைட்ரஜன் / அமோனியாவை ஆண்டுக்கு சுமார் 2 மில்லியன் டன்களை கையாளுவதற்கு தேவையான சரக்குதள வசதி மற்றும் சரக்குகளை கையாளும் உள்கட்டமைப்பை நிறுவும் பணியில் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் முழு கவனம் செலுத்தி வருகிறது.

திரு. சுசந்த குமார் புரோகித், இ.இ.ப.மி.பொ., தலைவர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் கூறுகையில் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் பல்வேறு தனித்துவ சிறப்பம்சங்களான கிழக்கு மேற்கு சர்வதேச கடல்வழிதடத்திற்கு அருகாமையில் அமைந்திருத்தல், 24 X 7 செயல்பாடு, குறைந்த இயக்க விகிதம் 28.18 சதவிகிதம், குறைந்த நேரத்தில் துறைமுகத்திற்கு கப்பல்கள் வந்து செல்லுதல், சீர்மிகு இணைப்பு தளவாடங்கள், வரவிருக்கும் தொழிற்சாலைகள் மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு உள்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களின் மூலம் தென் இந்தியாவின் வர்த்தக நுழைவு மையமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் திகழும் என்று கூறினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி